திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது கிராம சேவக் என்று அழைக்கப்படுகிற சொல் என்ன மொழி? தனித் தமிழ் இல்லை. அதைத் தனித் தமிழில் அழைப்பதற்கு என்ன தடை ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பெயரை கிராம மக்கள் எல்லாம் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளில் பயிற்சி பெற்ற கிராம சேவக்குகளில் மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே அதிகமாக இருக்கிறார்கள். சேலம் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் குறைவாக இருக்கிறார்கள்? இவ்வாறு கிராம சேவக்குகளைத் தேர்ந்தெடுக்கும்போது பின் தங்கிய சேலம் மாவட்டத்திற்கு இனி யாவது அதிகப் பங்கு கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நான் மாவட்ட ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை வாசிக்கும்போது மதுரை 65, ராமநாதபுரம் 90, சேலம் 109 என்று சொன்னேன். ஏற்கனவே சேலம் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அதிகமாகத்தான் இருக்கிறார்கள்.

திரு. க. ர. நல்லசிவம் : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் ஜில்லாவில், 27 கிராம சேவக்குகள் தேர்ந்தெடுப்பட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை அவ்வளவு தானா? அல்லது அதிகப் பேர்கள் விண்ணப்பத்திருக்கிறார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : விண்ணப்பம் போட்டவர்களில் தகுதி உள்ளவர்களைத் தான் நான் சொன்னேன்.

Social Welfare Workers

* 494 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the functions of the Social Welfare Workers working in the panchayat union councils ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது குறித்து சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இந்த கிராம நல ஊழியர்களின் பணியைப் பற்றி ஒருவருக்கும் சரியாகத் தெரியவில்லை. அதனால்தான் அவர்களும் சரியாகப் பணி செய்ய முடியாமல் இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ?

---

[a] 780–781-ம் பக்கங்களில் நான்காவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

23rd November 1963]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எல்லா கிராம சேவக்குகளும் சரியாக வேலை செய்யவில்லை என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அங்கத்தினர் தன்னுடைய பகுதியிலே ஏதாவது தனிப்பட்ட ஒரு கிராம சேவக் சரியாக வேலை செய்யவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல். முருகையயன் : தலைவர் அவர்களே, சென்ற பட்ஜட் கூட்டத்திலேயே, திருவண்ணாமலை, துரிஞ்சாபுரம் என்ற இடத்தில் உள்ள கிராம சேவக் வியாபாரியாகவும் இருக்கிறார் என்பதைச் சொன்னேன். இது வரையில் எந்த விதமான நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்பட வில்லை. அரசாங்கத்தின் சம்பளத்தை வாங்கிக் கொண்டு இவ்வாறு வியாபாரியாகவும் இருக்கலாமா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதைப் பற்றிய தகவல் எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கலாம்.

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் (நியமனம்)

* 495 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வட்டார வளர்ச்சி அதிகாரிகள்—பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் பதவிகளுக்காக கீழ்க்கண்ட முறைகளில் நியமனங்கள் செய்யப்படுகின்றன :—

(i) வேறு யாதொரு வகுப்பு அல்லது சேவையிலிருந்து மாற்றம் மூலம்.

(ii) சமூகக் கல்வி அமைப்பாளர்கள் தரத்திலிருந்து பதவி உயர்வு மூலம்.

(iii) தாசில்தார்களையும், செக்ரடேரியட் சூப்பரின்டென்டுகளையும், ரெவின்யூ போர்டு சூப்பரின்டெண்டுகளையும் ஓராண்டுக்குக் குறையாமல் நியமித்தனுப்புவதன் மூலம்; டெபுடி கலெக்டர்களின் அங்கீகாரப் பட்டியலில் சேர்க்கப் பெறுவதற்கான தகுதியை மேலே குறிப்பிட்டவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களாக ரெவின்யூ இலாக்காவில் வேலை செய்து வந்தவர்களைப் போடுவதினால் கஷ்டம் ஏற்படுகிறது. அவர்கள் ரெவினியூ இலாக்காவில் எவ்வாறு தர்பார் நடத்தினார்களோ அது போலவே இராம ராஜ்ய அமைப்பாகிய பஞ்சாயத்து யூனியன்களிலும் தர்பார் நடத்துகிறார்கள். ஆகவே பஞ்சாயத்து இயக்கங்களில் அனுபவப்பட்டவர்களை பி.டி.ஓ. க்களாகப் போடுவார்களா ?